முருகப்பெருமான் துணை

**மகான் கஞ்சமலைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா வாழ்க
நன்மைபுரியும் மாதவசியாக
தானதரும வழிகளை காட்டும்
தவராஜனே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலைதிங்கள்
வரங்களென மூவைதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள், 31.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கஞ்சமலைச் சித்தரும்
அருளுவேன் உலகம் உயர்வுபெற
வாசிவென்ற அரங்க மகானும்
வல்லமை கூட்டி ஞான தீட்சையாக
4. ஆகவே மக்களுக்கு அருளிவர
அறிவிப்பேன் கலியுக மக்கள்
வகைபட தேடி வருதல் காண
வரமாக வாழ்க்கை உயரும்
5. உயரவே அரங்கன் தருமவழி
உலகமக்கள் தொடர்பு கூட்டி
தயவை வளர்க்கின்ற வண்ணம்
தருமம் உலகெல்லாம் செய்துவர
6. வருகவே கலியுகம் தானும்
வலிமை இழந்து தருமலோகமாகி
முருகப் பெருமான் ஆளுமை வருகின்ற
முழுமையான ஞானயுகமாக மாறும்

7. மாறுதலை செய்யவந்த ஞானி
மாதவசி அவதார நோக்கம்
ஆறுமுகன் வெளிப்பாடாக இருக்க
அகிலத்தார் அனுகி வந்து
8. அனுகிவந்து அரங்கன் வழி
அனைத்து மக்களும் சரணாகதி
தானாக அடைந்து தொடர
தவதரும வழிகளை ஏற்றுவர
9. வருகவே மக்களிடை தெளிவு
வள்ளலாக வரமாகக் கூடி
தருமம் வளரும் தரணி மாறும்
தலைமைகளையும் மாற்றி இனிதே
10. இனிதே ஞான ஆட்சி காலம்
இயம்பிட அரங்கன் தொண்டர்படை
கனிவேலவன் தலைமை கொண்ட
கலியினில் படைத்திட நேரும்
11. நேருமைபட பதவி மாந்தர்களும்
நிலமதனில் அரங்கனை நாடிவர
வருங்காலம் நல்லாட்சிக் காலமாக
வையகம் கண்டுமே தேறும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–